




# சென்னையில் தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவின் கருத்துக் கேட்புக் கூட்டம்!

## தி.மு.க. தேர்தல் அறிக்கை மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கும் – கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

**சென்னை, பிப். 6-**

**சென்னை தேனாம்பேட்டையில் உள்ள அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவின் கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெற்றது. தேர்தல் அறிக்கை குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தி.மு.க. செய்தி தொடர்பு குழுத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், அமைச்சர்கள் கோவி.செழியன், டி.ஆர்.பி. ராஜா, பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.**

கூட்டத்தில், தமிழ்நாடு அருந்ததியர் முன்னேற்றப் பேரவை, ஆதிதிராவிடர் மகாஜனசபை, அனைத்து முதலியார் வேளாளர் சங்கங்களின் பேரவை, இளைஞர் படுகர் சங்கம், மக்கள் மறுமலர்ச்சி கழகம், தமிழ்நாடு வீரபாண்டிய கட்டபொம்மன் பண்பாட்டுக் கழகம் உள்ளிட்ட சமுதாய பிரதிநிதிகள், வணிகர்கள், மீனவர்கள், பொதுமக்கள் என பலரும் தங்களது கோரிக்கைகளை தெரிவித்து, மனுக்களை அளித்தனர்.

கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களிடம் பேசிய கனிமொழி கருணாநிதி எம்.பி., தி.மு.க. தேர்தல் அறிக்கை மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கும் என்றும் அனைத்துத் தரப்பினரிடமும் கருத்துகளை கேட்டறிந்துள்ளதாகவும் கூறினார்.

மேலும், நாடாளுன்றத்தில் 8 எம்.பி.க்கள் கூட்டத் தொடர் முழுவதும் சஸ்பெண்ட் செய்யப்பட்டது ஏற்கமுடியாது என்றும் கூறினார்.



### 10 சட்டமன்றத் தொகுதிகளில்

# ‘தமிழ்நாடு தலைகுனியாது’ - மூன்றாம் நாள் பரப்புரை!

## கழக வெற்றிக்கு - மக்கள் திரள் ஆதரவு!















**சென்னை,பிப்.6-**

**கழகத்தலைவர் உத்தரவின் படி கழகத்தின் சார்பில் தமிழ்நாடு முழுக்க 234 தொகுதிகளிலும் ‘தமிழ்நாடு தலைகுனியாது’ பரப்புரை நடைபெற்று வருகிறது. இப்பரப்புரையில் கழகத்தின் நட்சத்திர பரப்புரையாளர்கள் கலந்து கொண்டு திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கிப் பேசியும், ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டுக்கு செய்து வரும் வஞ்சகத்தை விளக்கியும், பா.ஜ.க.-அ.தி.மு.க. கூட்டணியின் துரோகத்தை மக்களிடையே எடுத்துரைத்தும் பரப்புரை செய்து வருகின்றனர். மூன்றாம் நாள் (03.02.2026) “தமிழ்நாடு தலைகுனியாது” பரப்புரைக் கூட்டமானது 10 சட்டமன்ற தொகுதிகளில் மிகப்பெரிய அளவில் நடைபெற்றது.**

இனிகோ இருதயராஜ் திரு.வி.க நகரிலும், எம்.எம். அப்துல்லா சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியிலும், திருமதி.தமிழச்சி தங்கபாண்டியன் மயிலாப்பூரிலும், எழிலன் நாகநாதன் பல்லாவரம் தொகுதியிலும், தயாநிதி மாறன் மதுராந்தகத்திலும், சபாபதி மோகன் பாலக்கோடு தொகுதியிலும், திண்டுக்கல் ஐ. லியோனி ஏற்காட்டிலும், ராஜ கண்ணப்பன் திட்டக்குடியிலும், பொன் முத்துராமலிங்கம் புதுக்கோட்டை தொகுதியிலும், மனோஜ் பாண்டியன் திருச்செந்தூரிலும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இப்பரப்புரையின் போது திராவிடமாடல் அரசின் திட்டங்களான மகளிர் உரிமை தொகை திட்டம், பெண்களுக்கு கட்டணமில்லா விடியல் பயணம், காலை உணவு திட்டம், புதுமை பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம் உள்ளிட்ட திட்டங்களால் தமிழ்நாட்டு மக்கள் எவ்வாறெல்லாம் பயன்டைந்து வருகின்றனர் என்றும், ஒன்றிய பா.ஜ.க. அரசு வஞ்சித்த போதும் 11.19% பொருளாதார வளர்ச்சி விகிதத்தோடு தமிழ்நாடு No.1 மாநிலமாக உயர்ந்துள்ளது, பசி பட்டினி இல்லா சமூக குறியீட்டில் முன்னேறி உள்ளது தமிழ்நாட்டின் தனி நபர் வருமானம் உயர்ந்துள்ளது என்ற சாதனைகள் பற்றி எல்லாம் மக்கள் முன் எடுத்துரைக்கப்பட்டது.

அதோடு ஒன்றிய பா.ஜ.க. அரசு வழக்கம்போல ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டுக்கு எந்த நிதியும், வளர்ச்சி திட்டங்களையும் ஒதுக்காமல் அல்வா கொடுக்கிறது என்பதை குறிக்கும் வகையில் பொதுமக்களுக்கு அல்வாவும் துண்டு பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரைக்கு அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் மிகப்பெரிய வரவேற்பு கிடைத்து வருகிறது. மக்களுக்கான நலத்திட்டங்களும், தமிழ்நாட்டின் வளர்ச்சியும் நீடிக்க வேண்டும் என்றால் அதற்கு கழகத் தலைவர்தான் முதலமைச்சராக தொடர வேண்டும் என பேச்சாளர்கள் உரையாற்றினர்.